எல்லா மாநிலங்களையும் சேர்த்து பொதுவான கொள்கையை மத்திய அரசாங்கம் கடைப்பிடிப்பதன் மூலம் இந்த ஆணையைத் திவிரமாக அமல் படுத்த முடியும்.

சென்னையில் இயங்கும் நீதிமன்றங்கள்

*189 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகரில் நடமாடும் நீதிமன்றங்கள் தற்போது எத்தனை இயங்குகின்றன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: சென்னையில் நான்கு நடமாடும் நீதி மன்றங்கள் இயங்குகின்றன.

திரு. ரா. ரா. முனுசாமி: சென்னையிலே நடமாடும் நீதிமன்றங்கள் இருந்து, குற்றவாளிகளை உடனடியாக விசாரித்து தண்டனை கொடுக்கிறார்கள். அதுபோல் வட்டங்களில் குற்றம் செய்பவர்களை உடனுக்குடன் தண்டிக்க வாய்ப்பு ஏற்படும் வகையில் நடமாடும் நீதிமன்றங்கள் அமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: உடனுக்குடன் தண்டனை கொடுத்தால் நல்லது அல்ல. விசாரித்துத்தான் தண்டனை கொடுக்க வேண்டும். அதிக மான வழக்குகள் பெரிய நகரங்களில் வருவதால் அந்த நகரங்களுக்கு மட்டும் இந்தத் திட்டம் அமலாக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம்: இந்த நடமாடும் நீதிமன்றங்கள் சென்னையைத் தவிர வேறு எந்த நகரங்களில் இருக்கின்றன? அப்படி வேறு நகரங்களில் இல்லையென்றால் மதுரை, கோவை, திருச்சி, சேலம் போன்ற அதிக ஜனத் தொகையுடைய நகரங்களில் நடமாடும் நீதிமன்றங்களை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஏற்கனவே சில நகரங்களுக்கு இந்தத் திட்டம் பரிசீலிக்கப்பட்டு வந்தது. அந்த விவரம் இல்லை. எந்தெந்தப் பெரிய நகரங்களில் இதுபோன்ற வழக்குகள் அதிகமாக வருகின்றனவோ அங்கெல்லாம் இந்த முறை பின்பற்றப்படும்.

Water in Buckingham Canal.

*190 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether it is a fact that waters flowing in the Buckingham Canal in Madras City is becoming red; and

(b) if so, whether any experiments have been conducted thereon?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம். சில சமயங்களில் பக்கிங்ஹாம் கால்வாயில் மாநகராட்சி குழாய்கள்மூலம் கழிவு நீரை விடுவதாலும், அக்கழிவு நீரிலும் மற்ற கழிவுப்பொருள்களிலும் மருந்து மற்றும் பல

ரசாயனப் பொருள்கள் கலந்திருப்பதாலும் கால்வாயில் செல்லும் நீர் சிவப்பு நிறமாக மாறுகின்றது.

(இ) கால்வாய் தண்ணீர் சிகப்பாக மாறுவது தற்காலிகமே தவிர நிரந்தரமான தன்மையில்லாமையால், பரிசோதனைகள் ஏதும் செய்யப் படவில்லை.

சாத்தனூர் அணை

*191. வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுகூர்ந்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தனூர் அணைக்கட்டை மேலும் அழகுபடுத்தும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) சாத்தனூரில் உள்ள பூங்காக்களை மேலும் அழகுபடுத்த ரூபாய் 1.80 இலட்சத்திற்கு ஒரு மதிப்பீடு தலை அதிகாரிகளின் பரிசிலனையில் உள்ளது.

நீர்த்தேக்கத்தின் நடுவே உள்ள தீவில் புதிய பூங்காக்கள் உண்டாக்க ரூ. 1.50 இலட்சத்திற்கு ஒரு மதிப்பீடு அரசின் பரிசிலனையில் உள்ளது.

Over bridge near Adamankottai

*192 Q.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government have any proposal to construct over bridges across Railway crossings at Dharmapuri-Adamankottai and Mc.Donald Choultry on Sankari road;

(*b*) if so, the details thereof and the estimated cost of construction;

(*c*) the respective share of the Central Government and the State Government; and

(*d*) when the work is likely to be started and completed?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) அதியமான் கோட்டைக்கு அருகிலும் மகுடஞ்சாவடியிலும் உள்ள பாலங்களின் மதிப்பீடுகள் முறையே ரூ. 3,53,698, ரூ. 5,17,313-ம் ஆகும்.

(உ) முழுச் செலவும் இரயில்வேயினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

(எ) திருத்திய மதிப்பீட்டுக்கு மைய அரசின் ஒப்புதல் பெற்றுக் கொடுக்கும்படி 29—11—1971 அன்று இரயில்வேயினர் மாநில நெடுஞ்சாலை தலைமைப் பொறியாளரைக் கேட்டுக்கொண்டுள்ளனர். இது செயல்பட விருக்கிறது. மகுடஞ்சாவடியின் அருகில் மேம்பாலம் கட்டி முடிக்கப்பட்டு போக்குவரத்துக்கு திறந்துவிடப்பட்டிருக்கிறது.

சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS